பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

13 06 2026 SATURDAY 7 15 PM ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரான்ஸ், ஸ்லோவாக்கியா நாடுகளுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று புதுதில்லியிலிருந்து புறப்பட்டார்.

2. மத்திய அரசின் சீரிய கொள்கைகளால், இரண்டாவது பெரிய உயர்கல்வி கட்டமைப்பை இந்தியா பெற்றுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. உணவு பாதுகாப்பு, விவசாயிகளின் நலன் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று பிரிக்ஸ் நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

4. ஒரே நாடு - ஒரே தேர்தல் நடைமுறையை கொண்டு வருவதற்கான முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்

5. உலக கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் ஸ்காட்லாந்து அணி 40 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

>>>>><<<<<

இந்தியாவின் வெளியுறவு தொலைநோக்குப் பார்வையில் பிரான்ஸ் சிறப்பான இடத்தை பெற்றுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஆறு நாட்கள் பயணமாக பிரான்ஸ் மற்றும் ஸ்லோவாக்கியா நாடுகளுக்கு இன்று பிற்பகல் புதுதில்லியிலிருந்து பிரதமர் புறப்பட்டுச் சென்றார்.

முன்னதாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த இருநாடுகளுக்கும் தாம் மேற்கொள்ளும் பயணம், இருதரப்பு பொருளாதார மற்றும் கலாச்சார தொடர்புகளை வலுப்படுத்தும் என்று தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய யூனியன், குறிப்பாக ஸ்லோவாக்கியாவுடன் இந்தியா கொண்டுள்ள கூட்டு முயற்சிகளுக்கு இந்தப் பயணம் உத்வேகம் அளிக்கும் என்று பிரதமர் கூறியுள்ளார்.

நாளை, பிரான்ஸ் அதிபர் திரு. இமானுவேல் மேக்ரோனுடன் இணைந்து Bharat Innovatives நிகழ்ச்சியை தொடங்கி வைக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் புத்தாக்க தொழில்கள், ஆராய்ச்சியாளர்கள், முதலீட்டாளர்கள் ஆகியோரை ஒன்றிணைக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நிகழச்சி, இருதரப்பு கூட்டு முயற்சிகளுக்கு உத்வேகம் அளிக்கும் என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

நாளை ஸ்லோவாக்கியாவிற்கு இரண்டு நாள் பயணத்தை தொடங்குவதாக தெரிவித்துள்ள பிரதமர், அந்நாட்டு அதிபர் திரு. Peter Pellegreni, பிரதமர் திரு. Robert Fico ஆகியோரை சந்தித்து இருதரப்பு உறவுகள் மற்றும் கூட்டு முயற்சிகள் குறித்து விவாதிக்கவுள்ளதாக கூறியுள்ளார்.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசின் சீரிய கொள்கைகளால், 2வது பெரிய உயர்கல்வி கட்டமைப்பை இந்தியா பெற்றுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் 12 ஆண்டுகால சேவையைப் பாராட்டி அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், கல்வியில் புதிய கலாச்சாரத்தையும், திறன் மேம்பாடு, புதிய கண்டுபிடிப்புகள், புத்தாக்க தொழில்கள் ஆகியவற்றில் சாதனைகள் படைக்கப்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளார்.

இரண்டாவது பெரிய செயற்கை நுண்ணறிவு சார் களஞ்சியமாக இந்தியா உருவெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

2 லட்சத்திற்கும் மேற்பட்ட புத்தாக்க தொழில்கள், கடந்த 12 ஆண்டுகளில் தொடங்கப்பட்டு, 3வது பெரிய புத்தாக்க தொழில் கட்டமைப்பை இந்தியா பெற்றுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

6 கோடிக்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி, 12 கோடிக்கும் மேற்பட்ட முத்ரா கடனுதவி, 300க்கும் மேற்பட்ட விண்வெளி புத்தாக்க நிறுவனங்கள் ஆகியவை நிறுவப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய இளைஞர்கள் வேலை தேடுபவர்கள் என்ற நிலை மாறி, தற்போது வேலைவாய்ப்பை உருவாக்குபவர்களாக மேம்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஐ.ஐ.டி., எய்ம்ஸ் உள்ளிட்ட உயர்கல்வி நிறுவனங்கள் மூலம், உலக தரத்திலான கல்வி வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட கேலோ இந்தியா மையங்கள் மூலம், இளைஞர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

>>>>><<<<<

உணவு பாதுகாப்பு, விவசாயிகளின் நலன், சுற்றுச் சூழலுக்கு உகந்த சாகுபடி, வேளாண் வர்த்தகம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று பிரிக்ஸ் நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

மத்தியப்பிரதேச மாநிலம், இந்தூரில் கடந்த 5 நாட்களாக நடைபெற்ற பிரிக்ஸ் வேளாண் உச்சி மாநாட்டின் நிறைவு நாளான இன்று வெளியிடப்பட்ட பிரகடனத்தில் இந்த தீர்மானத்திற்கு உறுப்பு நாடுகள் ஒருமனதாக ஆதரவு தெரிவித்துள்ளன.

இந்த உச்சிமாநாட்டில் பேசிய மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான், உலகின் 50 சதவீத மக்கள்தொகையை பிரிக்ஸ் நாடுகள் கொண்டுள்ளதாகவும், 42 சதவீத வேளாண் உற்பத்தியை உலகிற்கு அளித்து வருவதாகவும் தெரிவித்தார்.

இந்தப் பிரகடனம் ஆவணமாக மட்டுமின்றி, அதனை நிறைவேற்றும் பொறுப்பையும் உறுப்பு நாடுகளுக்கு அளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

\>>>>><<<<<

இந்திய வேளாண் சாகுபடி முறைகளுக்கான ஆராய்ச்சி நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி, உறுப்பு நாடுகளின் இயற்கை வேளாண்மை மற்றும் புத்தாக்க சாகுபடி முறைகளுக்கான ஆராய்ச்சிகளை ஒருங்கிணைப்பது, மின்னணு வேளாண் கட்டமைப்புகளை உருவாக்குவது உள்ளிட்ட முக்கிய முடிவுகளை இந்தூர் உச்சி மாநாட்டில் பிரிக்ஸ் நாடுகள் எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

பாரம்பரிய பயிர் ரகங்களை பாதுகாக்கவும், விவசாயிகளின் உரிமைகளை நிலைநாட்டவும், உலகளாவிய அமைப்பை ஏற்படுத்தவும் இந்த மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக திரு. சிவராஜ்சிங் சௌஹான் கூறினார்.

\>>>>><<<<<

ஒரே நாடு - ஒரே தேர்தல் நடைமுறையை கொண்டு வருவதற்கான முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியிலில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒரே நேரத்தில் மக்களவைக்கும், மாநில சட்டமன்றங்களுக்கும் தேர்தல் நடைபெற்றால், தேர்தல் செலவினம் கணிசமாக குறையும் என்று கூறினார்.

தேர்தல் அலுவலர்களின் சேவையை ஆக்கபூர்வமாக பயன்படுத்தவும் இந்த நடைமுறை உதவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான தேசிய □னநாயக கூட்டணியின் 12 ஆண்டுகால சாதனைகளை பட்டியலிட்ட அவர், 25 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வறுமையின் பிடியிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், 5 லட்சத்திற்கும் மேற்பட்ட கிராமங்களில், 12 கோடிக்கும் மேற்பட்ட பாதுகாப்பான கழிப்பிட வசதி செய்து தரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான நிதி ஒதுக்கீடு 12 லட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் டாக்டர் எல். முருகன் கூறினார்.

>>>>><<<<<

இந்திய ராணுவப் பயிற்சி கல்லூரியிலிருந்து பெண்கள் பயிற்சி பெற்றது பெருமை அளிப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

டேராடூன் ராணுவப் பயிற்சி கல்லூரியில் பயிற்சி முடித்த 515 பயிற்சி வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டு பேசிய அவர், நாட்டின் பாதுகாப்பிற்காக சேவை மனப்பான்மையுடன் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும் என பயிற்சி வீரர்களை கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பாக பயிற்சியை முடித்த வீரர் விஷால்குமாருக்கு தங்கப்பதக்கத்தை அவர் வழங்கினார்.

வெளிநாடுகளைச் சேர்ந்த 34 வீரர்களுக்கும் இந்த ராணுவ பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி அளிக்கப்பட்டது.

>>>>><<<<<

கேரளாவில் Nipah வைரஸ் பரவுவதை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக மாநில சுகாதாரத்துறை அமைச்சர் திரு. கே. முரளிதரன் தெரிவித்துள்ளார்.

திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நோய் அறிகுறிகள் இருந்த சிலரை மருத்துவ பரிசோதனை செய்ததில், அவர்களுக்கு தொற்று இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளதாக கூறினார்.

இதனிடையே, கோழிக்கோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நிபா வைரஸால் பாதிக்கப்பட்ட ஒருவர் சிகிச்சை பெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இவருடன் தொடர்பில் இருந்த 87 பேரை மருத்துவ அலுவலர்கள் கண்காணித்து வருகின்றனர்.

தேசிய நோய் கட்டுப்பாட்டு மையத்திலிருந்து நிபுணர்கள் கோழிக்கோடு மாவட்டத்திற்கு சென்று நிபா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

>>>>><<<<<

அஸ்ஸாமில் இந்திய விமானப்படையின் **AN 32** ரக விமானம் விபத்துக்குள்ளானதில் **5** பேர் உயிரிழந்தனர்.

ே□ார்காத் இந்திய விமானப்படை தளம் அருகே நேரிட்ட விபத்தில் இந்திய விமானப்படையின் Squadron Leader Prashant Singh, Flight Lt. Shubham, Sergeant Jitendra Sharma, அக்னிவீரர்கள் Khemaram, Danish ஆகிய 5 பேர் உயிரிழந்ததனர்.

இந்த விபத்தில் உயிரிழந்த விமானப்படை வீரர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாக பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த வீரர்களின் தைரியத்தை, சேவையையும், நாடு நன்றியுடன் நினைவுகூருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், இந்த விபத்து குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், இதுதொடர்பாக வதந்திகளை யாரும் வெளியிட வேண்டாம் என்றும் இந்திய விமானப்படை கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>><<<<<

Balochistan-ல் அப்பாவி பொதுமக்கள் பாகிஸ்தான் படையினரால் கொல்லப்படுவதற்கு பலூச் மனித உரிமைகள் அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள செய்தியில், இன்று பொதுமக்களில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாகவும், மேலும் இரண்டு பேர் கடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

உலக கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் ஸ்காட்லாந்து அணி 40 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மான்செஸ்டாரில் நடைபெற்ற அயர்லாந்துக்கு எதிரான போட்டியில் முதலில் விளையாடிய ஸ்காட்லாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 161 ரன் எடுத்தது.

162 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய அயர்லாந்து அணி 19 புள்ளி ஒரு ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து, 121 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

>>>>><<<<<

இந்தியா - ஆப்கானிஸ்தான் இடையேயான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி மழை காரணமாக 25 ஓவராக குறைக்கப்பட்டுள்ளது.

முதலில் களமிறங்கியுள்ள ஆப்கானிஸ்தான் சற்றுமுன்வரை 17 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 148 ரன் எடுத்துள்ளது.

டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்து வீச தீர்மானித்தது.

>>>>>END<<<<<